ப.மு. 41472/2019/ஆ4
நாள். 27.07.2021.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம்.

## தடையின்மை சான்று

பொருள்: தடையின்மை சான்று - காஞ்சிபுரம் மாவட்டம் - உத்திரமேரூர் வட்டம் - மாம்பாக்கம் கிராமம் - புல எண். 36/1 மற்றும் சில - 1.87.5 ஹெக்டேர் நிலத்தில் கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளி துவங்குவதற்கு அனுமதி கோரி அப்பள்ளியின் தாளாளர் திரு. சார்டோ ராஜேந்திரன் மனு அளித்தது - அறிக்கை வரப்பெற்றது - தடையின்மை சான்று வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1.கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளியின் தாளாளர் திரு.சார்டோ ராஜேந்திரன் என்பவரது மனு நாள். 27.03.2019

2.உத்திரமேரூர் வட்டாட்சியரின் அறிக்கை ந.க.எண்.1203/2019/அ1 நாள்-05.07.2019

3.சார்ஆட்சியர், காஞ்சிபுரம் அறிக்கை ந.க.3150/2019/அ1 நாள். 07.11.2019

4.செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை, கீழ்பாலாறு வடிநிலக் கோட்டம், காஞ்சிபுரம் கடித எண்.இவஅ5/கோ.28 (NOC)-மாம்பாக்கம்/2020/460 பல நாள்-06.03.2020

5.துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் கடிதம் ஓ.மு.எண்.359/2020/கா.மா.2 நாள்-05.09.2020

6.வேளாண்மை துணை இயக்குநர் (ம) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை), காஞ்சிபுரம் ந.க.எண் 23(107)/2019(வே) நாள்-08.01.2021

7.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), உத்திரமேரூர் கடித ந.க.எண்.792/2020/ஆ4 நாள்-29.01.2021

---

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மாம்பாக்கம் கிராமம், புல எண். 36/1, 36/2, 36/3பி மற்றும் சில புல எண்களின் மொத்த பரப்பு 1.87.5 ஹெக்டேர் நஞ்சை நிலத்தில் கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளி துவங்குவதற்கு தடையின்மை சான்று கோரி அப்பள்ளியின் தாளாளர் திரு. சார்டோ ராஜேந்திரன் என்பவர் விண்ணப்பித்தது தொடர்பாக கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தடையின்மை சான்று வழங்கப்படுகிறது.

தடையின்மைச் சான்று கோரும் புலங்களின் விவரங்கள் பின்வருமாறு கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது.

| புல எண் | உட்பிரிவு | வகைபாடு | பரப்பு ஹெக் ஏர் - | பட்டா எண் (ம) உரிமையாளர் |
|---|---|---|---|---|
| **36** | **1** | நன்செய் | 0.57.50 | 52.கார்டியன் பவுண்டேசன் |
| **36** | **2** | நன்செய் | 0.14.00 | 52.கார்டியன் பவுண்டேசன் |
| **36** | **3A** | நன்செய் | 0.39.50 | 52.கார்டியன் பவுண்டேசன் |
| **37** | **3A** | நன்செய் | 0.26.50 | 52.கார்டியன் பவுண்டேசன் |
| **37** | **4** | நன்செய் | 0.50.00 | 52.கார்டியன் பவுண்டேசன் |
| | | மொத்தம் | **1.87.50** | |

COLLECTOR - NOC 27/7/21

## பொதுவான நிபந்தனைகள்.-

| | |
|---|---|
| 1 | நிறுவனம் தடையின்மைச் சான்று கோரும் புலம் தற்போதுள்ள நெடுஞ்சாலையை விட அதிக உயரத்தில் இருக்க வேண்டும். |
| 2 | நிறுவனத்தார் தனது சொந்த இடத்திலேயே போதிய வடிகால் வசதிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் பிரஸ்தாப புலம் தாழ்வாக இருக்கும்பட்சத்தில் அதனை நீர் சூழாதவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். |
| 3 | நிறுவனத்தார் முன்மொழியப்பட்ட கட்டுமானத்தை மாற்றுவதற்கு முன்பு சம்மந்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறைக்கு முன்னரே அறிவிப்பு வழங்க வேண்டும். |
| 4 | கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்படும் குப்பைகள் / இடிபாட்டுப் பொருட்களை பொது இடங்களில் கொட்டாமல் சொந்த இடத்திலேயே சேகரித்து முறையாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி வெளியேற்றப்பட வேண்டும். |
| 5 | அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து பெறப்பட்ட கட்டட வடிவமைப்பின்படி முறையாக மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கேற்ப பொருத்தமான அடித்தளத்தினை அமைத்து கட்டடம் கட்டப்பட வேண்டும். |
| 6 | நிறுவனத்தாரின் புல எண்ணில் அமைக்கப்படவுள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அருகில் உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் ஓடையில் கலக்காதவாறும் சம்மந்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் முறையான வழிமுறைகளைப் பெற்று நிறுவனத்தாரின் நிலத்திலேயே தனது சொந்த செலவில் கழிவு நீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். |

மனுதாரர் திரு.சார்டோ இருதயராஜ் என்பவர் கோரியவாறு காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், நெ.104, மாம்பாக்கம் கிராமம், நன்செய் புல எண்.36/1, 36/2, 36/3ஏ, 36/3பி மற்றும் 37/4 மொத்தப் பரப்பு 1.87.5 ஹெக்டேர் நிலத்தில் கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளி புதியதாக துவங்குவதற்கு தடையில்லாச் சான்று வழங்க உத்திரமேரூர் வட்டாட்சியர் மற்றும் காஞ்சிபுரம் சார்ஆட்சியர் ஆகியோர் பரிந்துரை செய்துள்ளனர்.

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1 | ஏரி, புறம்போக்கு, பாசன வாய்க்கால்களை ஆக்கிரமிப்புகள் செய்தல் கூடாது. |
| 2 | அருகாமையிலுள்ள நீர்நிலைகளில் Sanitary / Waster Water Disposals போன்றவைகளால் மாசுபடுத்துதல் கூடாது. |
| 3 | உத்தேச இடத்தில் பிற உபயோகங்களுக்கு அபிவிருத்தி செய்யும் முன்னர் இத்துறையின் முன் அனுமதி பெற வேண்டும். |

**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வே)/வேளாண்மை துணை இயக்குநர் பரிந்துரை:**

தடையின்மைச்சான்று கோரும் புலங்களின் நான்கு எல்லைகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

வடக்கில் - வாய்க்கால்
கிழக்கில் - தென்னந்தோப்பு ஒட்டிய தார்சாலை
தெற்கில் - தனியரது காலியிடம் (தென்கிழக்கு பகுதியில் வீடு அமைந்துள்ளது)
மேற்கில் - பனைமரம் மற்றும் காலியிடம்.

மேற்கண்ட குறிப்புகள் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றை நிறைவு செய்யும் வகையில் அமைவதால் கீழ்கண்ட பொதுவான நிபந்தனைகள் விதிக்கப்படலாம் என்ற குறிப்பும்

1. உத்தேச இடத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுவதால் அருகாமையிலுள்ள இடங்களை மாசுபடுத்துதல் கூடாது என்ற விவரமும்,
2. உத்தேச இடத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளுக்கு சம்மந்தப்பட்ட துறைகளிடம் உரிய அனுமதி பெற்று பயன்படுத்த அனுமதிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## செயற் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, கீழ்பாலாறு வடிநில கோட்டம் அலுவலக நிபந்தனைகள்.

மனுதாரர் தமையின்மை சான்று கோரும் புலங்களான மாம்பாக்கம் கிராம புல எண். 36/1, 36/2, 36/3பி மற்றும் 37/4 மொத்தப் பரப்பு 1.87.5 ஹெக்டேர் நிலங்கள் யாவும் மாம்பாக்கம் தாங்கல் ஏரியின் கீழ் அமைந்துள்ள பாசனபரப்பு நிலங்களாகும். இந்த மாம்பாக்கம் ஏரி முறைசாரா பாசன ஏரிகளில் ஒன்றாகும். இந்த ஏரியில் 2 மதகுகளும், 1 மிகை நீர் போக்கியுடன் 1372 மீ நீளமுடைய ஏரிக்கரையும் உள்ளது.

**மாம்பாக்கம் ஏரியின் நீரியியல் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| ஏரியின் முழு நீர் மட்ட அளவு (FTL) | : | (+) 38.315 மீ |
| ஏரியின் உச்ச நீர் மட்ட அளவு (MWL) | : | (+) 39.615 மீ |
| ஏரிக்கரையின் மேல் மட்ட அளவு (TBL) | : | (+) 40.615 மீ |

மனுதாரருக்கு சொந்தமான நிலங்கள் அருகில் அமைந்துள்ள மாம்பாக்கம் தாங்கல் கலங்களின் சுவர் மட்ட அளவு (FTL Level) (+) 39.315 மீ னை அடிப்படையாகக் கொண்டு நில மட்ட அளவுகள் கண்டறியப்பட்டுள்ளது. மனுதாரரின் நிலங்களின் சராசரி நிலமட்ட அளவு (+) 37.750 மீ என கண்டறியப்பட்டுள்ளதாகவும், நிலத்தின் முன்புறம் செல்லும் பேரணக்காவூர் - மாம்பாக்கம் கிராம சாலையின் மேல்மட்ட அளவு (+) 38.500 மீ ஆகும்.

வெள்ள மழை காலங்களில் மனுதாரரின் நிலங்கள் தண்ணீரில் மூழ்காமல் இருக்க பேரணக்காவூர் - மாம்பாக்கம் கிராம சாலையின் மேல்மட்ட அளவு(+) 38.500 மீ ஐ விட கூடுதலாக அதாவது (+) 0.50மீ உயரத்திற்கு மண்கொட்டி நிரப்பப்பட வேண்டும்.

மண்கொட்டி நிரப்பப்படவேண்டிய அளவு - பேரணக்காவூர் - மாம்பாக்கம் செல்லும் கிராம சாலையின் மேல்மட்ட அளவிற்கு மேல் 0.50 மீ அதாவது (+) 38.500 + 0.50 மீ = (+) 39.000மீ ஆகும்.

மேற்குறிப்பிட்ட தளஆய்வு விவரங்கள் மற்றும் மனுதாரரின் நிலத்தின் நிலமட்ட தொழில்நுட்ப கூறுகளின் அடிப்படையில் மனுதாரரின் மாம்பாக்கம் கிராமம் நன்செய் புல எண். 36/1, 36/2, 36/3பி மற்றும் 37/4 மொத்தப் பரப்பு 1.87.5 ஹெக்டேர் நிலத்தில் கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளி புதியதாக துவங்குவதற்கு தடையில்லாச் சான்று கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

<u>நிபந்தனைகள்.</u>

1. மனுதாரருக்குச் சொந்தமான மாம்பாக்கம் கிராமம் நன்செய் புல எண். 36/1, 36/2, 36/3பி மற்றும் 37/4 மொத்தப் பரப்பு 1.87.5 ஹெக்டேர் நிலத்தில் கார்டியன் இண்டர்நேஷனல் பள்ளி புதியதாக துவங்குவதற்கு உரிய நிலவகைபாடு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

2. மனுதாரர்கள் தடையின்மை சான்று கோரியுள்ள புல எண்கள் வெள்ள நீர் பாதிப்பு ஏற்படாமலிருக்க கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு படிப்படியாக மண்கொட்டி உயர்த்தி நிரப்பப்பட வேண்டும்.

| வ. எண். | மனுதாரரின் புல எண், | பரப்பு | மனுதாரரின் புல எண்களின் சராசரி மட்ட அளவு மீட்டரில் | பேரணக்காவூர் - மாம்பாக்கம் செல்லும் கிராம சாலையின் மட்ட அளவு (மீட்டரில்) | பரிந்துரை செய்யப்படும் மட்ட அளவு (+) 38.500 + 0.50 மீ = (+) 39.000மீ ஆகும். | மண்கொட்டி நிரப்பப்பட வேண்டிய அளவு (மீட்டரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1, | 36/1, 36/2, 36/3பி மற்றும் 37/4 | 1.87.50 | (+) 37.750 | (+) 38.500 | (+) 39.000 | 1.250 |

3. மனுதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உயரத்திற்கு முறையான மண் பரிசோதனை (Soil Test) செய்த மண்ணை கொண்டு நிரப்பப்பட வேண்டும்.
4. மனுதாரருக்கு சொந்தமான நிலப்பரப்புகளில் உள்ள புல எண்களில் அமைக்கப்படவுள்ள கட்டிடங்களிலிருந்து வேளியேறும் கழிவுநீர் மனுதாரரின் நில்ப்பரப்புகளுக்கு அருகே செல்லும் பாசனக் கால்வாயில் கலக்காதவாறு மனுதாரரின் புல எண்ணில் உள்ள நிலப்பரப்பில் தனது சொந்த செலவில் கழிவு நீர் உட்கட்டமைப்பு அமைக்கப்படவேண்டும்.
5. மழை வெள்ள காலங்களில் வெள்ள நீர் வடிய மனுதாரர் தங்களுடைய புல எண்ணை சுற்றியும் **0.45மீ x 0.75 மீ** என்ற அளவுகளில் சுற்றுப்புற மழைநீர் கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.
6. மனுதாரர்கள் புல எண்களில் கட்டப்படும் கட்டிடங்களில் இருந்து விழும் மழைநீரை சேமிக்க மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு வசதியை மனுதாரர் புல எண்களில் மனுதாரர்கள் சொந்த செலவிலேயே அமைக்கப்பட வேண்டும்.
7. மனுதாரர் நிலப்பரப்புகளில் பள்ளிக் கட்டிடம் அமைப்பதினால் அருகே பிற நிலங்களில் விவசாயப்

பணிகள் நடைபெற்று வருவதால் அந்த விவசாய நிலங்களுக்கு எவ்வித பாதப்பும் ஏற்படா வண்ணம் கட்டிட அமைப்புகள் அமைக்க வேண்டும்,

8. நீர்வள ஆதாரத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய வரும் போது மனுதாராகள் தடையேதும் செய்யக்கூடாது.

9. மனுதாரர்கள் அளித்துள்ள நில விவர ஆவணங்களின் உண்மை தன்மைக்கு மனுதாரர்களே முழு பொறுப்பு ஆவார்.

10. மேற்காணும் நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் தடையின்மை சான்று இரத்து செய்ய சிபாரிசு செய்வதற்கு இத்துறைக்கு முழு உரிமை

27/7/21

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

27/7/2021

பெறுநர்,

திரு. சார்டோ ராஜேந்திரன்,
எண். 543/1, வள்ளலார் பில்டிங்,
முதல் தெரு, பெரிய மேலமையூர்,
செங்கல்பட்டு - 603003.

நகல்.-

1..வருவாய் கோட்டாட்சியர், காஞ்சிபுரம்.

2.செயற்பொறியாளர், (நீ.ஆ.து)
கீழ்பாலாறு வடிநிலக் கோட்டம், காஞ்சிபுரம்.

3.வட்டாட்சியர், உத்திரமேரூர்.

NOC
27.07.2021